**கவனிக்க.**

- ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***
- ***சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுக்க.***
- ***வழங்கப்பட்டுள்ள நேரம் பகுதி I, பகுதி II இற்கும் உரியதாகும்.***

- ***01 – 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்கள் ஒன்று ஏதோ ஒரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாத அப்பெயரை இனங்கண்டு அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.***

1) 1. மர்மரா 2. அசோவ் 3. ஈஜியன் 4. கஸ்பியன் 5. பசுபிக் ( )

2) 1. ஒலிம்பஸ் 2. சாமோஸ் 3. லெஸ்பொஸ் 4. கோஸ் 5. டெலொஸ் ( )

3) 1. கிளாஸ்கோ 2. மார்சேல்ஸ் 3. செபீல்ட் 4. பர்மின் ஹாம் 5. மான்செஸ்ரர் ( )

4) 1. மத்தாயஸ் 2. மக்சி மில்லியன் 3. நெக்கர் 4. ஹீஸ்டாவுஸ் 5. வலன்ஸ்ரைன் ( )

5) 1. இக்னேசியஸ் லொயலா 2. ஜோன் வைக்கிளிப் 3. ஜோன் ஹஸ் 4. உல்றிச் சுவிங்கிலி 5. ஜோன் கல்வின் ( )

6) 1. ரோசாப் போர் 2. நைல்நதிப் போர் 3. பிரமிட் போர் 4. வாட்டலூ போர் 5. ரபல் ஹன்டிப் போர் ( )

7) 1. சாமுவேல் குறோம்வெல் 2. ஜேம்ஸ் ஹார்கீறீவ்ஸ் 3. றிச்சாட் ஆர்க்ரைட் 4. ஒலிவர் குறோம்வெல் 5. தோமஸ் நியூக்கொமன் ( )

8) 1. கலோன் 2. மிராவோ 3. அபேசைஸ் 4. மாறற் 5. டன்ற்ரன் ( )

9) 1. V. I. லெனின் 2. மார்சிம் கோர்க்கி 3. ஜோசப் ஸ்ராலின் 4. நிகிதா குருஷ்ஷேக் 5. கொப்பர் சேவ் ( )

10) 1. பிரித்தானியா பொதுநலவாய அமைப்பு 2. சர்வதேச நாணய நிதியம். 3. உலக உணவுத்திட்டம் 4. அகதிகளுக்கான உயர்ஸ்தானிகம் 5. ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான பண்பாட்டு நிறுவனம். ( )

- ***11 தொடக்கம் 15 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று பொருந்தவில்லை. அச்சோடியைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.***

11) 1. பிளேட்டோ - அக்கடமி
2. அரிஸ்ரோட்டில் - லைசியம்
3. தோமஸ் அக்குயினாஸ் - சுமா தியோலோஜயா
4. இராஸ்மஸ் - மடைமையின் புகழ்ச்சி
5. மார்ட்டின் லூதர் - கடவுளின் நகரம் ( )

12) 1. சொபோர்ஸா - மிலான்
2. மெடிஸி - புளோரன்ஸ்

3. எஸ்தே - ∴பெராரா
4. வலோயி - நேபிள்ஸ்
5. கொன்சாகா - மந்துவா ( )

13) 1. VI ஆம் ஹென்றி - பிரான்ஸ் மன்னன்
2. VII ஆம் ஹென்றி - இங்கிலாந்து அரசன்
3. சாள்ஸ் அல்பேர்ட் - ஸ்பானிய மன்னன்
4. 1ம் நிக்கலஸ் - ரஷ்யச் சக்கரவர்த்தி
5. 1ம் வில்லியம் - ஜேர்மனியின் கையிஸ்ஸர் ( )

14) 1. ஜேக்கொபின்ஸ் - பிரான்ஸ்
2. பொல்செவிக்ஸ் - ரஷ்யா
3. மென்ஷெவிக்ஸ் - ஸ்பானியா
4. பாசிவவாதிகள் - இத்தாலி
5. நாட்ஸிகள் - ஜேர்மனி ( )

15) 1. டிரிக்விலீ - நோர்வே
2. டேக் ஹமர்ஷல் - சுவீடன்
3. யூதான்ட் - தாய்லாந்து
4. குர்ட் வோல்டஹயிம் - ஆஸ்திரியா
5. பேரேஸ் டி குவேலார் - பேரு ( )

- **16 – 20 வரையான வினாவுக்களுக்கு X ,Y என நிரல்களில் பொருந்தக்கூடிய வகையில் தொடர்படுத்தும் போது வரும் சரியான சேர்மானத்தின் விடையை இனங்கண்டு அவற்றுக்குரிய இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

16)

| X | Y |
|---|---|
| 1. ஹெரடோரஸ் | A. இங்கிலாந்தைக் கைப்பற்றியவர் |
| 2. ஹிப்போக்கிரட்டீஸ் | B. மானிடவாதத்தின் தந்தை. |
| 3. யூலியஸ்சீசர் | C. மிலான் பிரகடனத்தை வெளியிட்டமை. |
| 4. கொன்ஸ்தாந்தின் | D. வரலாற்றின் தந்தை. |
| 5. பெற்றாக் | E. மருத்துவத்தின் தந்தை. |

1. ABECD 2. AEDCB 3. DEACB 4. BEACD 5. DEABC ( )

agaram.lk

17)

| X | Y |
|---|---|
| 1. யூப்பிட்டர் | A. கடற்தேவதை |
| 2. மெனர்வா | B. போர்க்கடவுள் |
| 3. வீனஸ் | C. கைப்பணி தேவதை |
| 4. நெப்ரியூன் | D. விண்வெளி தெய்வம் |
| 5. மார்ஸ் | E. காதல் தெய்வம் |

1. DCEAB 2. DBCAE 3. CBADE 4. EDCBA 5. ABCDE ( )

18)

| X | Y |
|---|---|
| 1. மானியமுறை | A. கூட்டுடமைச் சொத்து |
| 2. முதலாளித்துவம் | B. மக்களாட்சியுரிமை |
| 3. கட்டுப்பாடற்ற வர்த்தகம் | C. பொருளாதார நடவடிக்கைகளில் அரச தலையீடு. |
| 4. ஜனநாயகம் | D. அதிகாரப் பரவலாக்கம் |
| 5. பொதுவுடமை | E. தனியார் முயற்சி |

1. CBDEA 2. DECBA 3. CDBEA 4. CBAED 5. CEABD ( )

19)

| X | Y |
|---|---|
| 1. கொத்லாந்து | A. கருங்கடல் |
| 2. அயர்லாந்து | B. இந்து சமுத்திரம் |
| 3. சைப்பிரஸ் | C. அத்திலாந்திக் சமுத்திரம் |
| 4. கிரிமியா | D. போல்றிக் கடல் |
| 5. மடகஸ்கார் | E. மத்தியதரைக் கடல் |

1. EADBC 2. EBADC 3. DEABC 4. DCEAB 5. ADEBC ( )

20) X — Y

1. முப்பதாண்டுப் போர் — A. லூயி XIV
2. ராணியின் போர் — B. லூயி XV
3. ஏழாண்டுப் போர் — C. நெப்போலியன் III
4. கிறிமியன் போர் — D. கிறிஸ்ரின் IV
5. முதலாம் உலகப்போர் — E. கைசர் வில்லியம் II

1. DCEAB 2. CEABD 3. DEACB 4. BEACD 5. DABCE ( )

- **21 – 25 வரையுள்ள எல்லா வினாக்களுக்கும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று உரிய தலைப்பிற்கு பொருந்தவில்லை அதனைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

21) புரட்டஸ்தாந்து மதச் சீர்திருத்தம்.
1. ஜேர்மனயில் ஆரம்பமாகியது.
2. கத்தோலிக்கத் திருச்சபையின் ஊழலுக்கு எதிராக எழுந்தது.
3. மாட்டின் லூதர் தலைமை தாங்கினார்.
4. ரெட்செல் புரட்டஸ்தாந்து சீர்திருத்தத்திற்கு முக்கிய பங்களிப்புச் செய்தார்.
5. புரட்டஸ்தாந்து சீர்திருத்தம் ஐரோப்பாவின் பல நாடுகளுக்கும் பரவியது. ( )

22) வியன்னா மகாநாட்டில் பங்கு கொண்ட பிரதான தலைவர்கள்.
1. ஆஸ்திரியாவின் மெற்றர்னிக்
2. பிரஷ்யாவின் ஹார்டக்பேர்க.
3. பிரித்தானியாவின் காசீல்றீ
4. ரஷ்யாவின் I ஆம் சார் அலெக்சாண்டர்.
5. சார்டீனியாவின் கவூர் ( )

23) அமெரிக்கப் புரட்சியோடு தொடர்புடைய பிரதான நிகழ்ச்சிகள்.
1. பொஸ்டன் தேநீர் விருந்து
2. கண்டத்து மாநாடுகள்
3. பஸ்ரீல் தகர்க்கப்பட்டமை
4. சுதந்திரப் பிரகடனம்
5. பாரீஸ் உடன்படிக்கை ( )

24) பிரெஞ்சுப் புரட்சியின் பிரதான கட்டங்கள்.
1. ஸ்ரேற்ஸ் ஜெனரல் கூடியமை
2. ரெனீஸ் மைதான உறுதியுரை.
3. குடியரசுப் பிரகடனம்
4. லூயி XVII முடிசூட்டப்பட்டமை.
5. பயங்கர ஆட்சி ( )

25) முதலாம் உலகப்போரின் பின் எழுதப்பட்ட உடன்படிக்கை.
1. வேர்சோயில்ங் உடன்படிக்கை.
2. சாந்த ஜெமெயின் ஒப்பந்தம்.
3. நியூலி உடன்படிக்கை.
4. ரியனோன் உடன்படிக்கை.
5. பேர்ளின் உடன்படிக்கை ( )

- **26 – 30 வரையுள்ள ஒவ்வொன்றிற்கும் (A) (B) (C) (D) என்னும் நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடைகளும் சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவு செய்க.**

(A) யும் (B) மட்டும் சரியாயின் 1 எனவும்
(B) யும் (C) மட்டும் சரியாயின் 2 எனவும்
(C) யும் (D) மட்டும் சரியாயின் 3 எனவும்
(A) யும் (C) மட்டும் சரியாயின் 4 எனவும்
ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் 5 எனவும் புள்ளிக்கோட்டில் எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| (A) யும் (B) யும் மட்டும் சரி | (B) யும் (C) யும் மட்டும் சரி | (C) யும் (D) யும் மட்டும் சரி | (A) யும் (C) யும் மட்டும் சரி | ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு |

agaram.lk

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | மேற்பட்ட விடைகள் சரி |

26) ஐரோப்பாவில் தேசிய அரசு தொடர்பாக பின்வரும் எக்கூற்று / சரியானது / சரியானவை.
   A) பதினைந்தாம், பதினாறாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் எழுச்சி பெற்ற முக்கிய அரசியல் அமைப்பு தேசிய அரசு எனப்பட்டது.
   B) ஜேர்மன், இத்தாலி ஆகிய நாடுகளில் தேசிய அரசுகள் தோற்றம் பெற்றன.
   C) பலம் வாய்ந்த மத்திய அரசாங்கம் தேசிய அரசுகளில் காணப்பட்டன.
   D) தேசிய அரசின் எல்லைகள் வரையறுக்கப்படவில்லை. ( )

27) மேல்வருவனவற்றுள் முப்பதாண்டுப் போர் ஏற்படுவதற்கு ஏதுவாயிருந்த காரணங்கள் யாவை?
   A) ஜேர்மனியில் நிலவிய சமயப் போட்டிகள்.
   B) ஒக்ஸ்பேர்க் சமாதானத்தின் குறைபாடுகள்.
   C) பரிசுத்த உரோமப் பேரரசருக்கும் ஜேர்மன் அரசர்களுக்கும் இடையில் நிலவிய அரசியல் தகராறுகள்.
   D) 2ம் பிலிப் பரிசுத்த உரோமப் பேரரசாக முடிசூடப்பட்டமை. ( )

28) மேல்வருவனவற்றுள் இரண்டாம் உலகப் போர் தொடங்குவதற்கு ஏதுவாக இருந்த காரணங்கள் யாவை?
   A) வோல்க்கன் நெருக்கடி.
   B) ஜேர்மனி, ஒஸ்திரியா - ஹங்கேரி ரஷ்யா ஆகியனவற்றின் மூன்று வல்லரசுகளின் கூட்டணி.
   C) வேர்சேஸ் உடன்படிக்கையின் குறைபாடுகள்.
   D) இத்தாலியிலும் ஜேர்மனியிலும் பாசிச வாதம், நாசிவாதம் ஆகியவை எழுச்சி பெற்றமை. ( )

29) மேல்வருவனவற்றுள் ஜேர்மனியை இணைப்பதற்கு சாதகமாக அமைந்த காரணங்கள் யாவை?
   A) ஒஸ்ரியா வழங்கிய ஆதரவு
   B) சொல்பைரன்
   C) பிஸ்மார்க்கினுடைய ராஜதந்திர ஆற்றல்.
   D) அல்சேஸ் லொறேயின் என்பதை ஜேர்மனிக்கு வழங்குவதற்கு பிரான்ஸ் உடன்பட்டமை. ( )

30) மேல்வருவனவற்றுள் ஐக்கிய நாடுகள் சபை கையாண்ட நெருக்கடிகள் யாவை?
   A) மஞ்சூரியா மீதான ஜப்பான் படையெடுப்பு.
   B) அபிசீனியா மீதான இத்தாலி படையெடுப்பு.
   C) கொரியப் போர்.
   D) சுயெஸ் நெருக்கடி ( )

agaram.lk

- **31 – 35 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

31) கிரேக்கத்திற்கு முன்னர் நிலவிய நாகரிகத்தை பெயரிடுக.
   1. உரோம நாகரிகம்   2. மினெர்வன் நாகரிகம்   3. கிறிஸ்தவ நாகரிகம்
   4. இஸ்லாமிய நாகரிகம்   5. அமெரிக்க நாகரிகம் ( )

32) உரோமர் கால எழுத்தாளர்.
   1. தியூசீடிஸ்   2. அரிஸ்டோபனிஸ்   3. ஹோமர்
   4. வேர்ஜில்   5. பின்டார் ( )

33) ஐரோப்பியக் கூட்டணி நடத்திய மாநாடுகள்.
   1. ஐ – லா – சப்பேல்   2. ட்றொபௌ   3. லயிபாக்
   4. வெரோனா   5. பாரிஸ் ( )

34) பின்வருவனவற்றில் மைக்கல் அஞ்சலோவின் படைப்பு எது?
   1. சிஸ்ரைன் ஆலய ஓவியங்கள்   2. ஏதென்சின் பாடசாலை
   3. இறுதி இராப்போசனம்   4. மொனாலிசா
   5. அதீனா சிலை ( )

35) சோவியத் யூனியனின் ஆட்சியாளர்கள்.
   1. கால்மாஸ்   2 றொமனோவ்   3. றொஸ்கி
   4. V. I லெனின்   5. அன்ரன் நோவ் ( )

- ***36 – 40 வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுக்கள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிகளுக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் 1, 2, 3, 4, 5 என்பவற்றில் மிகவும் பொருந்துவதை எதுவென்பதைத் தெரிந்து அதன் இலக்கத்தை புள்ளிக் கோட்டில் எழுதுக.***

| | **முதலாவது கூற்று** | **இரண்டாவது கூற்று** |
|---|---|---|
| 1. | சரியானது | பிழையானது |
| 2. | சரியானது | சரியானது |
| 3. | பிழையானது | பிழையானது |
| 4. | பிழையானது | சரியானது |
| 5. | சரியானது | சரியானதும் முதல் கூற்றினை நன்றாக விளக்குவதாகும். |

| | **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** |
|---|---|---|
| 36) | கிரேக்க வழிபாட்டுகளில் பலியிடுதல் காணப்பட்டது. | உரோமர்கள் உயிரோடுள்ள, இறந்த பேரரசர்களை வணங்கினர். ( ) |
| 37) | கப்றால் பிறேசிலைக் கண்டுபிடித்தார். | அமெரிக்காவில் உள்ள போர்த்துக்கல்லின் குடியேற்றம் பிறேசில் நாடாகும். ( ) |
| 38) | ஏழாண்டுப் போரே அமெரிக்காவில் பிரித்தானியா வலுவாக காலூன்ற உதவியது. | பிரான்ஸ் அமெரிக்கச் சுதந்திரப் போரின் போராளிகளுக்கு உதவ முன்வந்தது. ( ) |
| 39) | ரஷ்யப் புரட்சியில் விவசாயிகள் கூடுதலாகி பங்களிப்பை வழங்கினர். | ஜோசப் ஸ்ராலின் ஐந்தாண்டுத் திட்டங்களை அமுல்படுத்தினார். ( ) |
| 40) | பெரஸ்ரைக்கா – கிளாஸ்நொட்ஸ் ஒப்பந்தம் கொப்பச்சேவ்ஆல் கைச்சாத்திடப்பட்டது. | 1961 இல் அமைக்கப்பட்ட பேர்லின் சுவர் 1987 இல் இடிக்கப்பட்டது. ( ) |

agaram.lk

**அறிவுறுத்தல்கள் :**

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **அத்துடன் பகுதி B இலிருந்து ஒரு வினாவையேனும் பகுதி C இலிருந்து ஒரு வினாவையேனும் தெரிவு செய்து மூன்று வினாக்களுக்கு விடை தருக. (முதலாம் வினா உட்பட விடையளிக்க வேண்டிய வினாக்களின் மொத்த எண்ணிக்கை நான்கு ஆகும்).**
- **முதலாம் வினாவுக்கு விடை அளிப்பதற்கு ஐரோப்பிய புறவுருவப்படம் வழங்கப்படும்.**

## பகுதி A

1) உமக்கு வழங்கப்பட்ட புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்ட பன்னிரெண்டு இடங்களையும் குறித்துப் பெயரிடுக.

1. றைன் நதி
2. அல்ப்ஸ் மலை
3. வடகடல்
4. கீல் கால்வாய்
5. எதென்ஸ்
6. கொன்ஸ்தாந்திநோபிள்
7. பாரிஸ்
8. மிலான்
9. போர்த்துக்கல்
10. லண்டன்
11. சுவீடன்
12. கோப்பன்கேன்

## பகுதி B

2) உரோம காலம் ஐரோப்பிய வரலாற்றில் சாதனை மிகுந்த காலமாக அமைந்துள்ளது.

1. உரோம மன்னர்கள் மூவரின் பெயர்களைத் தருக. (3 புள்ளிகள்)
2. உரோமர்களின் அட்சிமுறைகளை விளக்குக. (6 புள்ளிகள்)
3. உரோம ஆட்சிப் படர்ச்சியில் பியூனிக் போரின் முக்கியத்துவத்தை ஆராய்க. (7 புள்ளிகள்)

3) "முப்பதாண்டுப் போர் ஐரோப்பிய வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகக் கொள்ளப்படுகிறது." முப்பதாண்டுப் போர் தொடர்பான நான்கு கட்டங்களையும் கூற்றுடன் தொடர்புபடுத்தி ஆராய்க. (16 புள்ளிகள்)

4) இங்கிலாந்தில் ஏற்பட்ட கைத்தொழிற் புரட்சியின் சமூகப் பொருளாதார விளைவுகளைச் சுருக்கமாக ஆராய்க. (16 புள்ளிகள்)

5) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டுக்கு வரலாற்று முக்கியத்துவம் தொடர்பாகக் குறிப்புக்களை எழுதுக.

1. மதசீர்திருத்த இயக்கம்.
2. போர்த்துக்கேயரின் நாடுகாண் பயணங்கள்.
3. அமெரிக்கச் சுதந்திரப் போர்
4. பிரான்சியப் புரட்சி (8 x 2 = 16 புள்ளிகள்)

agaram.lk

## பகுதி C

6) "நெப்போலியன் போனபாட் ஐரோப்பாவின் தலைசிறந்த அரசர்களின் ஒருவராகக் கொள்ளப்படுகின்றான்".

1. நெப்போலியன் போனபாட் பிறந்த இடத்தை குறிப்பிடுக. *(1 புள்ளிகள்)*
2. பிரான்சிலே சக்கரவர்த்தி ஆவதற்கு முன்பு நெப்போலியன் தலைமையில் நடைபெற்ற அயல் நாட்டு படையெடுப்புக்கள் எவை? *(2 புள்ளிகள்)*
3. சக்கரவர்த்தி ஆவதற்கு முன்பு நெப்போலியன் போனபாட் பெற்றிருந்த முக்கியமான அரசியல் பதவிகள் யாவை? *(2 புள்ளிகள்)*
4. நெப்போலியன் போனபாட் கடைப்பிடித்த உள்நாட்டு, வெளிநாட்டு கொள்கைகளை நுணுகி ஆராய்க. *(11 புள்ளிகள்)*

7) இத்தாலி ஐக்கியம் பூண்ட வரலாற்றை தெளிவுற விளக்குக. *(16 புள்ளிகள்)*

8) இரண்டாம் உலகப்போர் முடிந்த பின்னுள்ள முதலாவது தசாப்த்திலே உலக வல்லரசுகள் எவ்வாறு இரு அணிகளாகப் பிரிந்தன என்பதனைப் பரிசீலனை செய்க. *(16 புள்ளிகள்)*

9) பின்வரும் எவையேனும் இரண்டிற்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த குறிப்புக்கள் எழுதுக.

1. சர்வதேச சங்கம்
2. வியன்னா மாநாடு
3. ரஷ்யப் புரட்சி
4. ஐக்கிய நாடுகள் சபை

(8 x 2 = 16 புள்ளிகள்)

agaram.lk